# நமது தின கனி

காலை நாளிதழ்

# NAMADHU DHINA KANI

Daily Morning

Vol: 01 | Issue: 298 | 4 Pages | 31.5.2024 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர்: 01 | இதழ்: 298 | 4 பக்கங்கள் | 31.5.2024 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


## பாஜக வெற்றி பெற்றால், விவசாயிகளின் நிலங்களை பறிக்க புதிய சட்டம் கொண்டு வரும்: அகிலேஷ் யாதவ்



உத்திரபிரதேசம், மே. 31


சமாஜ்வாடி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ், ராபர்ட்ஸ்கஞ்ச் மக்களவை தொகுதியின் சமாஜ்வாடி கட்சி வேட்பாளர் சோட்டேலால் கர்வாருக்கு வாக்கு சேகரித்தார். அப்போது அகிலேஷ் யாதவ் கூறியதாவது:

பா.ஜனதா தலைவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வர வாக்கு கேட்கிறார்கள். அதே தலைவர்கள் கருப்பு சட்டங்களை (விவசாயிகள் தொடர்பான மூன்று சட்டங்கள்) கொண்டு வந்தவர்கள் என்பதை மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அந்த கருப்பு சட்டங்கள் விவசாயிகள் ஒருங்கிணைந்து போராட்டம் நடத்திய பிறகு திரும்பப் பெறப்பட்டது. கருப்பு சட்டங்கள் திரும்பப் பெற்ற போதிலும் நாம் இன்னும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியம். அவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் அதேபோல் சட்டங்களை கொண்டு வந்து விவசாயிகள் மற்றும் பழங்குடியினரின் நிலத்தை பறித்து விடுவார்கள்.

இந்தத் தேர்தல் நம்முடைய எதிர்காலத்தின் பாதுகாப்பை பற்றியது. அதே நேரத்தில் இந்த தேர்தல் நம்முடைய அரசியலமைப்பு பாதுகாப்பு பற்றியது. அது நமக்கு மரியாதை கொடுக்கக் கூடியது. நமது உரிமை பாதுகாக்கக் கூடியது. இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்தால் ஏழை மக்கள் இலவச மாவு பெறுவார்கள். மொபைல் டேட்டே இலவசமாக வழங்கப்படும். இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும். இவ்வாறு அகிலேஷ் யாதவ் தெரிவித்துள்ளார்.

## காந்தியின் தேசியத்தை அறியாத ஆர்.எஸ்.எஸ்.காரர்களின் அடையாளம் இதுதான்: மோடியை விமர்சித்த ஜெய்ராம் ரமேஷ்



டெல்லி, மே. 31

1982 ஆம் ஆண்டு ரிச்சர்ட் அட்டன்பரோவின் 'காந்தி' திரைப்படம் வெளியாகும் வரை மகாத்மா காந்தியை உலகம் அறிந்திருக்கவில்லை என்று தனியார் செய்தி தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் மோடி பேசியது சர்ச்சையாகியுள்ளது.

தனியார் தொலைக்காட்சிக்கு மோடி அளித்த போட்டியில், "மகாத்மா காந்தி ஒரு சிறந்த ஆன்மா. கடந்த 75 ஆண்டுகளில், மகாத்மா காந்தியை உலகம் முழுவதும் அறியச் செய்வது நமது பொறுப்பு அல்லவா?

தயவுசெய்து என்னை மன்னிக்கவும், ஆனால் காந்தியை யாருக்கும் தெரியாது. முதன்முறையாக, காந்தி படம் (1982) எடுக்கப்பட்ட போது தான், காந்தியை பற்றியும் அவரது ஆளுமையை பற்றியும் மக்கள் தெரிந்து கொண்டார்கள். மார்ட்டின் லூதர் கிங், நெல்சன் மண்டேலா ஆகியோருக்கு நிகரானவர் மகாத்மா காந்தி.

காந்தி மூலமாக இந்தியா கவனம் பெற்று இருக்க வேண்டும். காந்தியின் தத்துவம் உலகத்தின் பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வாக இருக்கும் என்பதை உலகம் முழுவதும் பயணம் செய்த பிறகு நான் சொல்கிறேன்" என்று தெரிவித்துள்ளார். இந்நிலையில், காந்தி குறித்து மோடி பேசியது தொடர்பாக மூத்த காங்கிரஸ் தலைவர் ஜெய்ராம் ரமேஷ் தனது பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அதில், "1982 க்கு முன் மகாத்மா காந்தியை உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்படவில்லை என்று சொல்லும் பதவி விலகும் பிரதமர் எந்த உலகில் வாழ்கிறார் என்று தெரியவில்லை.

மகாத்மாவின் பாரம்பரியத்தை யாராவது அழித்திருந்தால், அது பதவி விலகும் பிரதமரே. வாரணாசி, டெல்லி மற்றும் அகமதாபாத்தில் உள்ள காந்திய நிறுவனங்களை அவரது சொந்த அரசாங்கம் அழித்துவிட்டது.

மகாத்மா காந்தியின் தேசியத்தை அறியாத ஆர்எஸ்எஸ்காரர்களின் அடையாளம் இதுதான். நாதுராம் கோட்சே காந்திஜியைக் கொன்றது அவரது சித்தாந்தத்தால் உருவாக்கப்பட்ட சூழல்தான்.

2024 தேர்தல் மகாத்மா காந்தி பக்தருக்கும் கோட்சே பக்தருக்கும் இடையே நடைபெற உள்ளது. பதவி விலகும் பிரதமர் மற்றும் அவரது கோட்சே பக்தர் கூட்டாளிகளின் தோல்வி உறுதியாகியுள்ளது" என்று பதிவிட்டுள்ளார்.

## இந்திய வரலாற்றிலேயே அதிகபட்ச வெயில்.. வெப்பத்தில் பாலைவனத்தையே தோற்கடித்த டெல்லி

டெல்லி, மே 31

காலநிலை மாற்றத்தால் உலகம் முழுவதும் ஏற்படத் தொடங்கியிருக்கும் அசாதாரணமான பருவநிலை இந்தியாவிலும் கடும் தாக்கத்தை ஏற்படுத்திவருகிறது. இயல்பாகவே அதீத காலநிலை நிலவும் இந்தியாவின் தலைநகரமான டெல்லியில் கடுமையான வெயில் வாட்டி வதைக்கத் தொடங்கியுள்ளது. இதனால் நகரம் முழுவதும் ஏற்பட்டுள்ள தண்ணீர் பஞ்சத்தால் மக்கள் கடும் அவதிக்கு உள்ளாகி வருகின்றனர்.

இந்நிலையில் வரலாறு காணாத வகையில் இந்தியாவில் இதுவரை பதிவான அதிகபட்ச வெப்பநிலை டெல்லியில் பதிவாகியுள்ளது. அதன்படி டெல்லியின் முன்கேஸ்பூர் பகுதியில் இன்று சுமார் 52.3 டிகிரி செல்ஸியஸ் வெப்பம் பதிவாகியுள்ளதாக இந்திய வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து விளக்கம் அளித்துள்ள இந்திய வானிலை மைய வட்டார இயக்குனர் குல்தீப் ஸ்ரீவத்சவா, ராஜஸ்தானில் இருந்துவீசும் வெப்பக் காற்றானது டெல்லியின் புறநகர் பகுதிகளை முதலில் தாக்குவதால் ஏற்கனவே நகரத்தில் நிலவில் அதீத வெப்பநிலையுடன் வெளியில் இருந்து வரும் இந்த வெப்பக்க காற்றானது இணைந்ததில் வரலாறு காணாத வெப்பநிலை பதிவாகியுள்ளதாக தெரிவித்தார்.

52.3 டிகிரி செல்ஸியஸ் என்பது டெல்லியில் சராசரியாக கணிக்கப்பட்ட வெப்பநிலையை விட 9 டிகிரி அதிகமாக பதிவாகியுள்ளது. கடைசியாக கடந்த 2002 ஆம் ஆண்டு பதிவான 49.2 டிகிரி செல்ஸியஸ் என்பதே அதிகபட்சமாக வெப்பநிலையாக இருந்தது.

சுமார் 30 மில்லியன் மக்கள் வாழும் டெல்லியில் தற்போது ஏற்பட்டுள்ள இந்த கால நிலை மாற்றத்தின் தாக்கம் விபரீத விளைவுகளை ஏற்படுத்தும் என்று அஞ்சப்படுகிறது. ஹீட் ஸ்டார்க் உள்ளிட்ட வெப்ப பாதிப்புளில் இருந்து மக்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

டெல்லி தவிர்த்து இன்று ராஜஸ்தானில் 51 டிகிரி செல்சியஸும், அரியானாவில் 50.3 டிகிரி செல்சியஸும் அதிகபட்ச வெப்பநிலையாக பதிவாகியுள்ளது. இதற்கிடையில் கடும் வெப்பத்துக்கு மத்தியிலும் மாலை வேலையில் டெல்லியின் ஓரிரு பகுதிகளில் லேசான மழை பெய்துள்ளதால் மக்கள் சற்று ஆசுவாசம் அடைந்துள்ளனர்.

## முல்லை பெரியாறு பகுதியில் புதிய அணை கட்ட முயற்சிக்கும் கேரளா அரசைக் கண்டித்து மேலூரில் விவசாயிகள் கண்டன ஆர்ப்பாட்டம்

மேலூர் மே.31

தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, மற்றும் இராமநாதபுரம் உள்ளிட்ட 5 மாவட்ட மக்களின் முக்கிய குடிநீர் மற்றும் பாசனத்தின் முக்கிய நீர் ஆதாரமாக விளங்கும் முல்லை பெரியாறு அணை பலவீனமாக உள்ளதாக கூறி, முல்லை பெரியாறு அணையை இடித்து விட்டு புதிய அணை கட்ட கேரளா அரசு முயற்சித்து வருகின்றது. மேலும், புதிய அணை கட்ட மத்திய சுற்றுச் சூழல் அமைச்சகம் மற்றும் வனத்துறையிடம் அனுமதி கோரியுள்ளது. இதனை கண்டித்து, மதுரை மாவட்டம் மேலூர் பகுதிகளைச் சேர்ந்த முல்லை பெரியாறு ஒரு போக பாசன விவசாயிகள் சங்கத்தினர் பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இந்நிலை யில், இதன் ஒருபகுதியாக மேலூர் பேருந்து நிலையம் முன்பாக, மேலூர் பகுதிகளைச் சேர்ந்த முல்லை பெரியாறு ஒரு போக பாசன விவசாயிகள் சங்கம் சார்பில், உச்ச நீதிமன்ற உத்தரவை மீறி செயல்படும் கேரள அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. விவசாய சங்கத் தலைவர் எம்.முருகன் தலைமை தாங்கினார். செயலாளர் பி. ரவி, பொருளாளர் டி.ஜெயபால், குறிஞ்சி குமரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தின் போது : தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, மற்றும் இராமநாதபுரம்



உள்ளிட்ட 5 மாவட்ட மக்களின் முக்கிய குடிநீர் மற்றும் பாசனத்தின் முக்கிய நீர் ஆதாரமாக விளங்கும், முல்லை பெரியாறு அணையில் உச்ச நீதிமன்ற உத்தரவை மீறி, அணை பலவீனமாக உள்ளதாக பொய் பிரச்சாரம் செய்து, புதிய அணை கட்ட முயற்சி மேற்கொண்டு வருவதால். தேனி, மதுரை இராமநாதபுரம் உள்ளிட்ட 5 மாவட்ட மக்களின் குடிநீர் மற்றும் விவசாய பணிகள் பெரிதும் பாதிக்கப்படுவதுடன், மக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்படுவதாக கூறி, புதிய அணை கட்ட முயற்சிக்கும் கேரளா அரசுக்கு எதிராக பல்வேறு கண்டன கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் முல்லை பெரியாறு பகுதியில், புதிய அணை கட்ட முயற்சி மேற்கொண்டு வரும் கேரளா அரசின் முயற்சியை மத்திய, மாநில அரசுகள் தடுக்க வேண்டும் என கோஷங்களை எழுப்பினர். ஆர்பாட்டத்தில் பெரியாறு வைகை விவசாய சங்க ஒருங்கிணைப்பாளர் அன்வர் பாலசிங்கம், தமிழ்நாடு அனைத்து விவசாய சங்க ஒருங்கி ணைப்பு குழு மாநில இளைஞரணி தலைவர் மேலூர் அருண், முல்லைப் பெரியாறு வைகை பாசன சங்கங்களில் கூட்டமைப்பு பொதுச்செயலாளர் ஆதிமூலம், சிவகங்கை வைகை பாசன விவசாய சங்கம் செயலாளர் கட்டிக்குளம் மாணிக்கவாசகம், தமிழ்நாடு அனைத்து விவசாய சங்க ஒருங்கிணைப்பு குழு மதுரை மாவட்ட செயலாளர் துரைச்சாமி, தமிழ்நாடு விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் மாநிலசெயலாளர் நேதாஜி, தமிழ்நாடு அனைத்து விவசாய சங்க ஒருங்கிணைப்பு குழு துணைத் தலைவர் செல்லம், சமூக ஆர்வலர் கம்பூர் செல்வராஜ், இளங்கோ, மாயழகு, மனோகரன் மற்றும் வர்த்தக சங்க நிர்வாகிகள், நகை கடை வியாபாரிகள், உரக்கடை வியாபாரிகள், விவசாயிகள் பொதுமக்கள் உட்பட பலர் போராட்டத்தில் கலந்து கொண்டனர். விவசாயிகளின் இந்த போரட்டத்தையொட்டி, சுமார் 200க்கும் மேற்பட்ட காவல் துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்

## அதிமுக வாக்கு எண்ணிக்கை முகவர்கள் கவனமுடன் செயல்பட வேண்டும் : எடப்பாடி பழனிசாமி அறிவுறுத்தல்

சென்னை, மே.31


அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தேர்தல் என்று வந்தாலே அதை நேர்மறையாகவும், நேர்கொண்டும் களமாடுகின்ற இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை மீண்டும் பறைசாற்றுகின்ற விதமாக, நடந்து முடிந்த நாடாளுமன்ற மக்களவைப் பொதுத் தேர்தலை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடலேறுகள் நேர்மையாகவும், நெஞ்சுரத்தோடும், கண்ணியத்தோடும் எதிர்கொண்டு முடித்திருக்கிறோம். அனைவருக்கும் என் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகளும், நன்றிகளும்.

நடந்து முடிந்த நாடாளுமன்ற மக்களவைப் பொதுத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மக்கள் பெருவாரியான ஆதரவையும், வாக்குகளையும் வாரி வழங்கியிருக்கிறார்கள். நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற விடியா திமுக அரசின் மீது இருக்கிற வெறுப்பும், இந்த பொம்மை முதல்அமைச்சர் மீது இருக்கிற நம்பிக்கையின்மையும், இந்தத் தேர்தலில் பெருவாரியாக வெளிப்பட்டிருப்பதை நாம் கண்கூடாக கண்டிருக்கிறோம். எப்படித் தேர்தலை நாம் நேர்மறையாகவும், நெஞ்சுரத்தோடும் சந்திக்கப் பழக்கப்பட்டிருக்கிறோமோ, அதற்கு நேர் எதிர்மாறாக இந்த விடியா திமுக, எந்தத் தேர்தல் ஆனாலும் எப்படி புறவாசல் வழியாக ஆட்சியைப் பிடிக்கலாம்.

எப்படி வாக்காளர்களின் கவனங்களை திசைதிருப்பி, மடைமாற்றி அவர்களின் வாக்குகளை களவாடலாம் என்ற எண்ணத்தோடே தொடர்ந்து தேர்தலில் வாக்குகளை களவாடி புறவாசல் வழியாகவே ஆட்சிக் கட்டிலில் ஏறி பழக்கப்பட்டவர்கள். அதைத் தொடர்ந்து செய்வதற்கு உண்டான முயற்சியை இந்த தேர்தலிலும் எடுத்திருக்கிறார்கள்.

தேர்தல் முடிந்து வாக்கு எண்ணும் நாளுக்காக நாம் காத்திருக்கிறோம். மக்கள் நல்ல தீர்ப்பை வழங்குவதற்கு தயாராக இருந்து அந்தத் தீர்ப்பை எதிர்நோக்கி இருக்கின்ற இந்த வேளையில், வாக்கு எண்ணும் மையங்களுக்குச் செல்லக் கூடிய முகவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றி க ளை யு ம் , வாழ்த்துகளையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.



நாடாளுமன்ற மக்களவைப் பொதுத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு 19.4.2024 அன்று முடிந்துள்ள நிலையில், 4.6.2024 அன்று வாக்கு எண்ணும் பணி நடைபெற உள்ளது. இதற்காக கழகத்தின் சார்பிலும், கூட்டணிக் கட்சிகளின் சார்பிலும் முகவர்களாக நியமிக்கப்பட்டிருக்கும் அனைவரும் மிகுந்த கவனத்துடனும், விழிப்புடனும் பணியாற்றி வெற்றிக் கனியை சிந்தாமல், சிதறாமல் பெற்று கழகத்திற்கும், கூட்டணிக் கட்சிகளுக்கும் சமர்ப்பிக்கும் வகையில் பின்வரும் அம்சங்களை நினைவில் கொண்டு பணியாற்றிட வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

வாக்கு எண்ணிக்கையின்போது கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய அம்சங்கள்:

★ வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாளான 4.6.2024 அன்று, கழகத்தின் சார்பிலும், கூட்டணிக் கட்சிகளின் சார்பிலும் நியமிக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணிக்கை முகவர்கள் அனைவரும், அந்தந்த மாவட்ட கழகச் செயலாளர்கள் மற்றும் வேட்பாளர்களின் அறிவுறுத்தலின்படி, தேர்தல் ஆணையம் குறிப்பிட்ட நேரத்திற்கு ஒரு மணி நேரம் முன்பாகவே, தேர்தல் நடத்தும் அலுவலரால் தங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் அடையாள அட்டையுடன் (Identity Card) வாக்கு எண்ணும் மையங்களுக்குச் சென்றுவிட வேண்டும். எக்காரணம் கொண்டும் காலதாமதமாக செல்லக்கூடாது.

★ வாக்கு எண்ணும் மையத்தில் வாக்கு எண்ணும் மேஜைகளுக்கேற்றார்போல் வாக்கு எண்ணும் முகவர்களை நாம் நியமித்திருக்கிறோம். அந்த முகவர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நாற்காலிகளில் முதலில் சென்று அமர்ந்துவிட வேண்டும். வாக்கு எண்ணும் மையத்திற்கு உள்ளே சென்றவர்கள் வாக்கு எண்ணிக்கை முடிவுற்று தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படுகிற வரை எக்காரணம் கொண்டும் வாக்கு எண்ணும் மையங்களில் இருந்து வெளியே வரக்கூடாது. மிகுந்த கவனத்தோடு வாக்கு எண்ணிக்கையை உற்று நோக்க வேண்டும்.

★வாக்கு எண்ணிக்கை மையங்களில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் அனைத்தும் முறைப்படி செய்யப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்திட வேண்டும். வாக்குப் பதிவு இயந்திரங்களில் வைக்கப்பட்டுள்ள சீல் முறையாக உள்ளதா என்பதை உறுதி செய்திட வேண்டும். ★ வாக்குப் பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகளும். ஏற்கெனவே படிவம் 17Cன் படி வாக்குப்பதிவு நாளன்று பதிவு செய்யப்பட்ட வாக்குகளும் சரியாக உள்ளதா என்பதை சரிபார்த்துக்கொள்ள வேண்டும்.

+ வாக்கு எண்ணிக்கையின் முடிவுகள், ஒவ்வொரு சுற்று முடிவிலும் அறிவிக்கப்படும் போதும், நீங்கள் குறித்து வைத்திருக்கிற வாக்குகள், தேர்தல் நடத்தும் அலுவலரால் சரியாக அறிவிக்கப்படுகிறதா என்பதை கவனமுடன் பார்க்க வேண்டும்.ஏதேனும், மாறுதல்கள் இருக்கிற பட்சத்தில் வாக்கு எண்ணிக்கையை தொடராமல் தேர்தல் நடத்தும் அலுவலரிடத்திலே தெரியப்படுத்த வேண்டும். உங்களுக்கு வருகிற ஐயங்களை வாக்கு எண்ணும் மையத்தின் பிரதான மேஜையின் முன் அமர்ந்திருக்கிற வேட்பாளரின் தலைமை முகவரிடத்திலே தெரியப்படுத்தி, அதை எழுத்துப்பூர்வமாக வேட்பாளரின் சார்பாக தேர்தல் நடத்தும் அலுவலரிடத்திலே கொடுத்து அதற்குண்டான ஒப்புகையை கட்டாயம் கேட்டுப் பெற வேண்டும். அதன் பின்னர் தான் அடுத்த சுற்று வாக்கு எண்ணிக்கை நடைபெறுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

★வாக்கு எண்ணும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் யாரேனும் மாற்றுக் கட்சியினருக்கு ஆதரவாகவும், முறைகேடாகவும் செயல்படுகிறார்களா என்பதை உன்னிப்பாகக் கண்காணித்து, குறைகள் இருப்பின் சம்பந்தப்பட்ட மேலதிகாரிக்கு உடனடியாக தகவல் தெரிவித்து உரிய தீர்வினை காண வேண்டும். திமுகவினர் வதந்திகளைப் பரப்புவதிலும், தில்லுமுல்லு செய்வதிலும், வன்முறையில் ஈடுபடுவதிலும் மிகவும் கைதேர்ந்தவர்கள் என்பதை இந்த நாடே நன்கு அறியும்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றியை உறுதி செய்திடும் வகையிலும், மக்கள் தீர்ப்பு நிலைநாட்டப்படும் வகையிலும், அனைவரும் மிகவும் விழிப்புடன் இருந்து பணியாற்றுங்கள். இது, ஜனநாயகப்பயிர் தழைத்தோங்க நாம் அனைவரும் ஆற்ற வேண்டிய இன்றியமையாத கடமை என்பதை நினைவில்கொண்டு பணியாற்றிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என தெரிவித்துள்ளார்.

# குடும்ப தகராறு: 1½ வயது குழந்தைக்கு விஷம் கொடுத்து கொன்று தாய் தற்கொலை

சேலம், மே. 31

சேலம் மாவட்டம் மல்லூர் அருகே நிலவாரப்பட்டி ஏலக்கரடு பகுதியை சேர்ந்தவர் ராஜா (வயது 30), கட்டிட மேஸ்திரி. இவருடைய மனைவி ரோஷினி (22). இவர்களுக்கு 1½ வயதில் நிதர்ஷன் என்ற குழந்தை இருந்தது. கணவன் மனைவி இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்தது. இதனால் ரோஷினி மனமுடைந்த நிலையில் காணப்பட்டார்.



நேற்று காலை ராஜா வழக்கம் போல் வேலைக்கு சென்று விட்டார். ரோஷினி தனது குழந்தையுடன் வீட்டில் தனியாக இருந்துள்ளார். இந்தநிலையில் ரோஷினி நீண்ட நேரமாக வீட்டை விட்டு வெளியே வராததால் சந்தேகம் அடைந்த அக்கம்பக்கத்தினர்மாலை 5 மணி அளவில் அவரது வீட்டிற்கு சென்று பார்த்தனர்.

அங்கு ரோஷினி மின்விசிறியில் தூக்கில் பிணமாக தொங்கிய நிலையில் கிடந்தார். அவரது அருகிலேயே குழந்தையும் இறந்த நிலையில் கிடந்துள்ளது. இதைக்கண்டு அதிர்ச்சி அடைந்த அக்கம் பக்கத்தினர் மல்லூர் போலீசாருக்கு தகவல் அளித்தனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த மல்லூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் பத்மாவதி தலைமையிலான போலீசார் ரோஷினி மற்றும் குழந்தை நிதர்ஷன் உடலை பிரேத பரிசோதனைக்காக சேலம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். சம்பவ இடத்திற்கு சேலம் ரூரல் துணை போலீஸ் சூப்பிரண்டு அமலஅட்வின் நேரில் சென்று விசாரணை நடத்தினார்.

போலீசார் நடத்திய முதல் கட்ட விசாரணையில் ரோஷினி குழந்தைக்கு விஷம் கொடுத்து கொலை செய்து விட்டு மின்விசிறியில் தானும் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டது தெரிய வந்தது. போலீசார் ரோஷினியின் கணவர் ராஜாவிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். திருமணம் ஆகி 3 ஆண்டுகளே ஆவதால் சம்பவம் குறித்து சேலம் உதவி கலெக்டர் அம்பாயிர நாதன் விசாரணை நடத்தி வருகிறார்.

1½ வயது குழந்தையை கொன்று தாயும் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியது.

# மதுரை மாவட்டம் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தின் மூலமாக மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை: மாவட்ட கலெக்டர் தகவல்

மதுரை, மே. 31

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலமாக மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 40 சதவீதம் மற்றும் அதற்கு மேல் பாதிக்கப்பட்ட மனவளர்ச்சி குன்றியோர் (), 75 சதவீதம் மற்றும் அதற்கு மேல் மிகக் கடுமையாக பாதிக்கபட்ட பல்வகை மாற்றுத்திறனாளிகள் (), தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்டோர் (), பார்கின்சன் நோய் மற்றும் நாட்பட்ட நரம்பியல் குறைபாடுடையோர் () மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தோர் () ஆகியோர்களுக்கு மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகையாக ரூ.2,000/ வழங்கப்பட்டு வருகிறது.

மேற்காணும், இத்திட்டத்தின் கீழ் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தின் மூலமாக மாதாந்திர உதவித்தொகை ரூ.2,000/ பெற்று பயனடைந்து வரும் மாற்றுத்திறனாளிகள் அனைவரும், 1. கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து கையொப்பம் பெற்ற வாழ்நாள் சான்று 2. மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை நகல் 3. மாற்றுத்திறனாளியின் ஆதார் அட்டை நகல்

4. தனித்துவமான அடையாள அட்டை நகல்

5. ரூ.2,000/ மாதாந்திர உதவித்தொகை பெறும் வங்கி கணக்கு புத்தக நகல்

6. வங்கி கணக்கில் பாதுகாவலராக உள்ள நபரின் ஆதார் அட்டை நகல் 7. பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஆகிய சான்றுகளுடன் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக புதிய கட்டிடத்தில் அமைந்துள்ள மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் மாற்றுத்திறனாளியின் பெற்றோர் / பாதுகாவலர் (மாற்றுத்திறனாளி வர வேண்டாம்) நேரில் வந்து 15.06.2024க்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்ப மேலும், கூடுதல் விவரங்களுக்கு மாற்றுத்திறனாளிகள் நல அலுவலக தொலைபேசி எண்: 04522529695க்கு தொடர்பு கொண்டு தகவலினை பெற்றுக் கொள்ளலாம் என்று மாவட்ட கலெக்டர் மா.செள.சங்கீதா, தெரிவித்துள்ளார்.

# காதலனுடன் தப்பி ஓட்டம்: கொலை வழக்கில் பெண் போலீஸ் இன்ஸ்பெக்டர் சிக்கியது எப்படி..?

ஸ்ரீவில்லிபுத்தூர், மே. 31

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் அன்னை சத்யா நகர் பகுதியை சேர்ந்தவர் ராமர் (வயது 60). அதேபகுதியைசோ்ந்தவர் ராமசாமி (65). இவருடைய மகன்கள் ராஜேந்திரன் (40), ராம்குமார் (35).

2 வாரத்துக்கு முன்பு அங்கு நடந்த கோவில் திருவிழாவில் ஏற்பட்ட தகராறில் ராமசாமி, அவரது மகன்கள் என 3 பேரும் சேர்ந்து ராமரை தாக்கினர். இதில்படுகாயம்அடைந்த ராமர் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக இறந்தார்.





இந்த கொலை வழக்கில் ராமசாமி, ராஜேந்திரனை ஸ்ரீவில்லிபுத்தூா் நகர் போலீசார் கைது செய்தனர். தலைமறைவான ராம்குமாரை தேடி வந்தனர். பின்னா் பெங்களூருவில் பதுங்கி இருந்த அவரை போலீசார் பிடித்தனர். அப்போது அவருடன் ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் மறுவாழ்வு முகாம் மற்றும் ராமநாதபுரம் சைபர் கிரைம் போலீஸ் இன்ஸ்பெக்டர் சத்தியஷீலாவும் (42) உடன் இருந்தார். அவரையும் போலீசார் கைது செய்தனர்.

தொடர்ந்து அவர்களிடம் போலீசார் விசாரணை நடத்தினர். இதில் வெளியான திடுக்கிடும் தகவல்கள் வருமாறு:

விருதுநகரைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் ஒருவரிடம் ராம்குமார் உதவியாளராக பணியாற்றி உள்ளார். அடிக்கடி செல்போனில் வித்தியாசமான டிக்டாக், ரீல்ஸ் வீடியோக்களை எடுத்து சமூக வலைதளங்களில் வெளியிடுவதை வழக்கமாக கொண்டு இருந்தார்.

இந்த வீடியோக்களை போலீஸ் இன்ஸ்பெக்டர் சத்தியஷீலா தனது செல்போனில் பார்த்து வந்தார். அவரது வீடியோக்கள் சத்தியஷீலாவை வெகுவாக கவர்ந்தன. இதனால் அவர்கள் இருவருக்கும் இடையே செல்போன் மூலம் பழக்கம் ஏற்பட்டது. இருவரும் ஏற்கனவே திருமணம் ஆகாமல் இருந்து வந்தனர். இதனால் அவர்களின் பழக்கம் நாளடைவில் காதலாக மாறியது.

இதற்கிடையே 2 வாரத்துக்கு முன்பு நடந்த கோவில் திருவிழாவில் சத்தியஷீலாவும் பங்கேற்று இருந்தார். அங்கு நடந்த தகராறிலும் ராம்குமாருடன் அவர் இருந்துள்ளார்.

இதனால் ராமரின் கொலைக்கு உடந்தையாக இருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் சத்தியஷீலா மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இதை அறிந்ததும் போலீசாரிடம் சிக்காமல் இருப்பதற்காக காதலனுடன் சத்தியஷீலா பெங்களூருவுக்கு தப்பிச்சென்றுள்ளார்.

அங்கு தங்களை பிடிக்க போலீசார் வந்ததை எப்படியோ அறிந்து கொண்ட இருவரும் கோவாவுக்கு செல்ல இருந்துள்ளனர். ஆனால் இருவரையும் போலீசார் மடக்கிப்பிடித்துவிட்டது தெரியவந்துள்ளது.

கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்ட சத்தியஷீலா, ராம்குமார் தற்போது மதுரை சிறையில் அடைக்கப்பட்டு உள்ளனர்.

வாலிபர் அனுப்பிய வீடியோக்களில் மனதை பறிகொடுத்து, பெண் இன்ஸ்பெக்டர் அவருடன் பழகி காதல் வயப்பட்டதும், கொலை வழக்கில் சிக்கியதும் இப்போது பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது.



விழுப்புரம் (தனி) நாடாளுமன்ற தேர்தல் வாக்குப்பதிவு நடைபெற்று முடிந்ததை தொடா்ந்து,வாக்கு எண்ணும் மையமான விழுப்புரம் அறிஞா் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறைகளில் (Strong Room) வைக்கப்பட்டுள்ள 06 சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் கண்காணிப்பு மையத்திலிருந்து கண்காணிப்பு கேமராக்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் சி.பழனி நேரில் பார்வையிட்டதுடன், கண்காணிப்பு பணிகளில் ஈடுபடும் காவல் படையினருக்கான வருகைப்பதிவேட்டினை ஆய்வு செய்து கையொப்பமிட்டார்

# பிரபல யூடியூபர் டிடிஎப் வாசன் கைது 6 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு

மதுரை, மே.31

பிரபல யூடியூபர் டிடிஎப் வாசன் கடந்தாண்டு காஞ்சிபுரத்தில் பைக் விபத்தில் சிக்கி படுகாயமடைந்தார். பொதுமக்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் விதமாக பைக் ஓட்டியதாக வழக்குப்பதிவு செய்து, மருத்துவமனையில் படுத்து கிடந்தவரை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.



பின்னர் டிடிஎப் வாசன் புழல் சிறையில் இருந்து கடந்த நவம்பரில் ஜாமீனில் வெளியே வந்தார். நீதிமன்ற உத்தரவுப்படி வாசனின் ஓட்டுநர் உரிமம் 10 ஆண்டுகள் ரத்து செய்து உத்தரவிடப்பட்டிருந்தது. இந்த சூழலில் சமீபத்தில் ஹைவேயில் கார் ஓட்டி சென்ற டிடிஎப் வாசன், தான் கம்பேக் கொடுத்து விட்டதாக தனது ரசிகர்களுக்காக வீடியோ வெளியிட்டிருந்தார்.

தொடர்ந்து வாசன் தனது கார் மூலமாக ஊர் ஊராக சுற்றி வருகிறார். அதனை கார் ஓட்டியபடி வீடியோவாக பதிவு செய்தும் வருகிறார்.

இந்நிலையில் பிரபல யூடியூபர் டிடிஎப் வாசன் மதுரை அண்ணாநகர் போலீசாரால் அதிரடியாக கைது செய்யப்பட்டுள்ளார். சென்னையில் இருந்து மதுரை வழியாக தூத்துக்குடி செல்லும் போது செல்போன் பேசியபடி கார் ஓட்டியதாக வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக கடந்த 15ந் தேதி இரவு 7.50 மணிக்கு மதுரை வண்டியூர் டோல் கேட் பகுதியில் காரை அஜாக்கிரதையாகவும், கவன குறைவாகவும் பொது மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் விதமாக செல்போனில் பேசி கொண்டே ஓட்டுவதும் அச்செயலை காரின் டேஸ்போர்டு கேமராவில் பதிவு செய்து யூடியூப் சேனலில் பதிவிட்டுள்ளார்.

இது குறித்து மதுரை மாநகர ஆயுதப்படை சப் இன்ஸ்பெக்டரும், சமூக ஊடகப்பிரிவு கண்காணிப்பு அலுவலருமான மணிபாரதி அண்ணாநகர் போலீசில் புகார் செய்தார். அதன்பேரில் போலீசார், டி.டி எப்.வாசன் மீது 6 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து காவல்நிலையத்திற்கு அழைத்துவந்து விசாரணை நடத்தினர். பின்னர் கைது செய்யப்பட்ட அவரிடம் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

# சிறார்கள் வாகனம் ஓட்டினால் ஆர்.சி. ரத்து; ஜீன் 1ம் தேதி முதல் அமல்

சென்னை, மே.31

சாலை விபத்துக்களை குறைக்கும் வகையில், மோட்டார் வாகன சட்டத்தில் புதிய உத்தரவு ஒன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது. சாலை விபத்துக்களை தடுக்க மத்திய, மாநில அரசுகள் எத்தனையோ விழிப்புணர்வுகளை மேற்கொண்டு வருகின்றன. விபத்து நடைபெறும் இடங்களை கண்டறிந்து விபத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றன.



தமிழகத்தில் சமீப காலமாக 18 வயதுக்கு கீழ் உள்ள சிறார்கள் வாகனம் ஓட்டுவதால்தான் அதிக விபத்து ஏற்படுகிறது. இது குறித்து அரசு பல்வேறு விழிப்புணர்வை ஏற்படுத்தினாலும் கூட விபத்து குறையவில்லை. விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் காயமடைந்தாலோ அல்லது இறந்தாலோ வாகனத்தை மைனர் அல்லது யாரேனும் இயக்கினால் மட்டுமே வாகன உரிமையாளர்களிடம் இருந்து இழப்பீடு பெற முடியும் என்ற மத்திய மோட்டார் வாகன சட்டம் 2019ஐ திருத்தம் செய்ததையடுத்து தமிழகத்தில் 18 வயதுக்குட்பட்டோர் வாகனம் ஓட்டினால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இந்நிலையில், 18 வயது பூர்த்தியடையாத சிறார்கள்கார் அல்லது இருசக்கர வாகனம் ஓட்டி பிடிபட்டால் அவர் ஓட்டிய வாகனத்தின் பதிவு சான்றிதழ் (ஆர்.சி.) ரத்து செய்யப்படும். வாகனத்தின் ஆர்.சி.யை ரத்து செய்யும் இந்த விதிமுறை ஜூன் 1ம் தேதி முதல் அமலாகிறது. மேலும் வாகனம் ஓட்டி பிடிபடும் சிறார்களுக்கு ரூ.25,000 அபராதமும், 25 வயதாகும் வரை ஓட்டுநர் உரிமம் வழங்கப்படாது.

# திருச்சி விமான நிலையத்தில் ரூ.1 கோடி மதிப்பிலான கடத்தல் தங்கம் பறிமுதல்

திருச்சி, மே. 31

திருச்சி விமான நிலையத்திற்கு வரும் விமானம் ஒன்றில் தங்கம் கடத்தி வரப்படுவதாக சுங்கத்துறை அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்து. இதையடுத்து விமான நிலையத்தில் சுங்கத்துறை அதிகாரிகள் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர். இதையடுத்துசிங்கப்பூரில் இருந்து திருச்சி விமான நிலையத்திற்கு வந்த பயணிகளிடம் சுங்கத்துறை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர்.




அப்போது பயணி ஒருவர்தனது தொடைப் பகுதியில், கால் முட்டிக்கு அணிவிக்கும் 'நீ கேப்' போன்று அணிந்திருந்தது சந்தேகத்தை ஏற்படுத்தியது. இதையடுத்து அவரைதனியாக அழைத்து சென்று அவருடைய உடமைகளில் சோதனை நடத்தப்பட்டது. அப்போது அவருடைய தொடைப்பகுதியில் போடப்பட்டிருந்த நீ கேப்பில் தங்கத்தை பேஸ்ட் வடிவில் மறைத்து எடுத்து வந்தது தெரிய வந்தது.

மேலும் அவரது உடைமைகளில் துணிகளுக்கு நடுவில் தங்க சங்கிலிகளை மறைத்து எடுத்து வந்ததும் தெரிய வந்தது. அவற்றை பறிமுதல் செய்த சுங்கத்துறை அதிகாரிகள் அந்த பயணியை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பயணியிடம் பறிமுதல் செய்யப்பட்ட1.424கிலோ தங்கத்தின் சர்வதேச விலை, ஒரு கோடியே 3 லட்சத்து 13 ஆயிரம் ரூபாய் என சுங்கத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# உல்லாசத்துக்கு வரவில்லை என்றால்... வீடியோவை காட்டி பெண்ணை மிரட்டிய காவலாளி



கோவை, மே.31

கோவை வேலாண்டிபாளையம் காந்தி காலனி மேற்கு வீதியை சேர்ந்தவர் ரங்கசாமி (வயது49). இவர் அங்குள்ள தனியார் மருத்துவமனையில் காவலாளியாக வேலை பார்த்து வந்தார்.

அப்போது அவருக்கு அங்கு வேலை பார்த்த 47 வயது பெண்ணுடன் காவலாளிக்கு பழக்கம் ஏற்பட்டது.

ஒரு கட்டத்தில் ரங்கசாமி, அந்த பெண்ணுடன் தனிமையில் நெருக்கமாக இருந்து உள்ளார். அதை அவர் ரகசியமாக தனது செல்போனில் வீடியோ எடுத்து உள்ளார்.

மேலும் அந்த ஆபாச வீடியோவை காட்டி தனது ஆசைக்கு இணங்காவிட்டால் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டு விடுவேன் என்று கூறி மிரட்டி உள்ளார். இது குறித்த புகாரின் பேரில் அனைத்து மகளிர் போலீசார் வழக்குப்பதிவு செய்து ரங்கசாமியை கைது செய்தனர். பின்னர் அவரை கோர்ட்டில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

சிறையில் இருந்து வெளியே வந்த ரங்கசாமி மீண்டும்அந்த பெண்ணை தொடர்பு கொண்டு உல்லாசத்திற்கு அழைத்து கொலை மிரட்டல் விடுத்து உள்ளார்.

இதையடுத்து அந்த பெண் மீண்டும் போலீசில் புகார் அளித்தார்.

புகாரின் பேரில் சாய்பாபா காலனி போலீசார் வழக்குப்பதிவு செய்து ரங்கசாமியை மீண்டும் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# வேலூரில் மதுபாட்டிலுக்குள் மிதந்த ஸ்டிக்கர் மதுப்பிரியர்கள் அதிர்ச்சி

வேலூர், மே. 31

வேலூர் காகிதப்பட்டறையை சேர்ந்தவர் செல்வமூர்த்தி (வயது 44), ஆட்டோ டிரைவர். இவர் நேற்று இரவு 8.45 மணி அளவில் வேலூர் காகிதப் பட்டறையில் பெட்ரோல் பங்க் அருகே உள்ள ஒரு டாஸ்மாக் கடையில் குவாட்டர் பிராந்தி பாட்டில் ஒன்றை வாங்கி சென்றார்.



பின்னர் அவர் தனது ஆட்டோவுக்கு டீசல் போட்டுவிட்டு வழக்கமாக மது அருந்தும் இடத்துக்கு சென்றார். அங்கு அவருடன் மது அருந்த நண்பர்களும் வந்திருந்தனர். அவர்கள் அந்த மது பாட்டிலை பார்த்தபோது பாட்டிலுக்குள், பாட்டில் மூடியில் ஒட்டப்படும் ஸ்டிக்கர்மிதந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

இதையடுத்து அவர்கள் வேலூர் வடக்கு போலீஸ் நிலையம் சென்று புகார் அளித்தனர்.

இதுகுறித்து செல்வமூர்த்தி கூறுகையில், ரூ.140க்கு உரிய மதுபாட்டிலை ரூ.145க்கு விற்பனை செய்தனர். கூடுதலாக ரூ.5 செலுத்தி மதுபாட்டிலை வாங்கினேன். அதன் உள்ளே ஸ்டிக்கர் மிதந்தது. அதை குடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதுதொடர்பாக புகார் அளிக்க உள்ளேன் என்றார்.

மதுபான பாட்டிலுக்குள் ஸ்டிக்கர் மிதந்த சம்பவம் மதுபிரியர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மேலும் ஸ்டிக்கர் மிதந்த மது பாட்டிலின் புகைப்படம் சமூகவலைதளங்களில் வைரலாகி வருகிறது.

# பழனி முருகன் கோவிலில் ரோப்கார் சேவை நிறுத்தம்

திண்டுக்கல், மே. 31

அறுபடை வீடுகளில் 3ம் படைவீடான பழனி முருகன் கோவிலுக்கு சாமி தரிசனம் செய்ய தினந்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருகின்றனர். அவ்வாறு வரும் பக்தர்கள் அடிவாரத்தில் இருந்து மலைக்கோவில் செல்ல படிப்பாதை பிரதான வழியாக உள்ளது. பக்தர்கள் மலைக்கோவிலுக்கு எளிதில் சென்றுவர ரோப்கார், மின்இழுவை ரெயில் ஆகிய சேவைகள் உள்ளன. இதில் விரைவாகவும், இயற்கை அழகை ரசித்தபடியும் 3 நிமிடத்தில் மலைக்கோவிலுக்கு செல்வதால் பெரும்பாலான பக்தர்கள் ரோப்கார் சேவையை பயன்படுத்தி வருகின்றனர். இந்த ரோப்கார் பராமரிப்பு பணியை முன்னிட்டு, தினமும் 1 மணி நேரமும் மாதத்துக்கு ஒரு நாளும், ஆண்டுக்கு ஒரு மாதமும்நிறுத்தப்படுவதுவழக்கம்.அதன்படிநாளை(வியாழக்கிழமை) ரோப்கார் நிலையத்தில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெறுகிறது. இதையொட்டி ரோப்கார் சேவை நிறுத்தப்படுகிறது. எனவே பக்தர்கள் மின்இழுவை ரெயில், படிப்பாதையை பயன்படுத்தி மலைக்கோவிலுக்கு சென்று முருகப்பெருமானை தரிசனம் செய்யலாம் என்று கோவில் நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நம்மைக் காக்கும் 48 இன்னுயிர் காப்போம் திட்டத்தில் தஞ்சை மருத்துவக் கல்லூரி இதுவரை ரூ.5.10 கோடி காப்பீட்டு பயன்கள் பெற்று மாநில அளவில் முதலிடம்: முதல்வர் டாக்டர் பாலாஜிநாதன் தகவல்



தஞ்சாவூர், மே.31

உலக அவசர சிகிச்சை தினத்தை முன்னிட்டு தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அடிப்படை இதய உயிர்ப்பு பயிற்சி மனித பொம்மைகளை வைத்து வழங்கப்பட்டது.

இதில் ஆட்டோ ஓட்டுநர்கள், அவசர சிகிச்சையில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் 108 அவசர சேவையில் பணிபுரியும் ஊழியர்கள் பங்குகொண்டு பயிற்சி பெற்றனர்.

பயிற்சி முகாமை மருத்துவக் கல்லூரி முதல்வர் மற்றும் இயக்குனர் டாக்டர் ஆர்.பாலாஜிநாதன் தொடங்கிவைத்தார்.

இதில் ஒருவருக்கு திடீரென மாரடைப்பு ஏற்படும்போது செய்ய வேண்டிய முதலுதவி சிகிச்சைகள் குறித்து மனித பொம்மைகளை வைத்து செய்முறை பயிற்சி அளிக்கப்பட்டது. எத்தனை முறை அழுத்தம் கொடுக்க வேண்டும், மூச்சு பயிற்சி எவ்வாறு கொடுக்க வேண்டும் என்பது குறித்து விளக்கமாக செய்து காண்பிக்கப்பட்டது. இவ்வாறு முதலுதவி செய்வதன் மூலம் மாரடைப்பிலிருந்து பாதிக்கப்பட்ட நபரை காப்பாற்றி விடலாம் என்று எடுத்துக் கூறப்பட்டது. முதலுதவி சிகிச்சை அளித்தாலும் உடனே தாமதிக்காமல் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. மேலும் இந்த செய்முறை பயிற்சியை மற்றவர்களுக்கும் எடுத்து கூறி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டன.

இதை தொடர்ந்து நிகழ்ச்சியில் மருத்துவக் கல்லூரி முதல்வர் பாலாஜி நாதன் பேசியதாவது:

தமிழக முதலமைச்சரால் கடந்த 2011ம் ஆண்டு தொடங்கப்பட்ட நம்மை காக்கும் 48 இன்னுயிர் காப்போம் திட்டம் தஞ்சாவூர் மாவட்டத்தில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இதற்காக அவசர சிகிச்சை துறையை பாராட்டுகிறேன்.

இத்திட்டத்தின் கீழ் சாலை விபத்துகளில் காயம்பட்டு வரும் நபர்களுக்கு 48 மணி நேரத்திற்குள் அவசர மற்றும் தீவிர சிகிச்சைகள் காப்பீட்டின் மூலம் ரூ.1 லட்சம் வரை இலவசமாக செய்யப்படுகிறது.

இந்த திட்டத்தின் கீழ் பயன்பெற தங்களின் அரசு அனுமதிக்கப்பட்ட அடையாள அட்டையை சமர்ப்பித்தால் போதுமானது.

நம்மை காக்கும் 48 இன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ்வரும் சிகிச்சைகள், அறுவை சிகிச்சைகள், ஸ்கேன் போன்ற பரிசோதனைகள் எந்த விதமான கட்டணமும் இல்லாமல் காப்பீட்டின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

இதுவரை தஞ்சை மாவட்டத்தில் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மட்டும் 6169 பேர் பதிவு செய்யப்பட்டு இதுவரை 5690 பயனாளிகளுக்கு ரூ.5 கோடியே 10 லட்சத்து 48 ஆயிரத்து 120 காப்பீட்டு பயன்கள் பெறப்பட்டுள்ளன.

இவ்வளவு பெரிய இமாலய தொகையை அரசு திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு பெற்றுத் தந்த அவசர சிகிச்சை துறையின் பொறுப்பு தலைவர் டாக்டர் வினோத் மற்றும் அவருடன் பணியாற்றும் அனைத்து மருத்துவர்கள், மேற்படிப்பு மாணவர்கள், பயிற்சி மருத்துவர்கள், செவிலியர்கள், பணியாளர்கள் மற்றும் காப்பீட்டு திட்ட ஊழியர்கள் அனைவரையும் மனதாரப் பாராட்டுகிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் மாநில டி.ஏ.இ.ஜ மேலாண்மை செயலாளர் டாக்டர் மருதுதுரை, மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் ராமசாமி, உள்ளுறை மருத்துவ அதிகாரி டாக்டர் செல்வம், துணை உள்ளுறை மருத்துவ அதிகாரிகள் டாக்டர்கள் முகமது இத்ரீஸ், முத்துமகேஷ் மற்றும் பல்வேறு துறை டாக்டர்கள், பயிற்சி மருத்துவர்கள் மற்றும் மருத்துவக் கல்லூரி ஆட்டோ சங்கத் தலைவர் ஐயப்பன், ஓட்டுநர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பாக நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகள்: கலெக்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வு



கிருஷ்ணகிரி, மே.31

கிருஷ்ணகிரி மாவட்டம், மத்தூர் ஊராட்சி ஒன்றியம், நாகம்பட்டி, மத்தூர், களர்பதி, கே.எட்டிப்பட்டி, குன்னத்தூர், வாலிப்பட்டி, கெரிகேப்பள்ளி, வீராச்சிக்குப்பம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பாக, ரூயஅ.98 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்ட பணிகளை மாவட்ட கலெக்டர் கே.எம்.சரயு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாவட்ட கலெக்டர் மத்தூர் ஊராட்சி ஒன்றியம், நாகம்பட்டி ஊராட்சி, மாடரஹள்ளி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் ஐஐ கீழ், ரூ.6 இலட்சத்து 15 ஆயிரம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் பெண்கள் கழிப்பறை கட்டிடத்தையும், மசுதி தெருவில் 15 வது நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ், ரூ.15 இலட்சத்து 86 ஆயிரம் மதிப்பில் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டுமான பணிகள் மற்றும் அங்கன்வாடி மையத்தை பார்வையிட்டு குழந்தைகளின் வருகை பதிவேடு, குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவுகள், குழந்தைகளின் உயரம், எடை ஆகியவற்றின் பதிவேடுகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், மத்தூர் ஊராட்சி ஒன்றிய வளாகத்தில் இயங்கி வரும் ஆதார வள மையத்தில் உள்ள மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளை பார்வையிட்டு, அவர்களுக்கு வழங்கப்படும் பிஸியோதெரப்பி, பேச்சுத்திறன், சிறப்பு கல்வி, மனநலம் மற்றும் அவர்களுக்கு வழங்கப்படும் உணவுகள் குறித்து ஆய்வு செய்து, இம்மையத்திற்கு வருகை புரிந்த பிறகு மாற்றுத்திறன் குழந்தைகளின் செயல்பாடுகள் மேம்பட்டுள்ளதா என்று குழந்தைகளின் பெற்றோரிடம் கேட்டறிந்தார். மேலும், மத்தூர் ஊராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் உள்;ர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.12 இலட்சத்து 30 ஆயிரம் மதிப்பில் புதியதாக கட்டி முடிக்கப்பட்டுள்ள நியாயவிலைக் கடை ஆய்வு செய்தும், மேலும், மத்தூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து, ரூ.62 ஆயிரம் மதிப்பில் ஸ்மார்ட் வகுப்பறை மற்றும் பாலா பெயிண்டிங் புசும் பணிகளை பார்வையிட்டார். தொடர்ந்து, களர்பதி ஊராட்சியில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டம் கீழ், ரூ.6 இலட்சத்து 92 ஆயிரம் மதிப்பில் பட்டு வளர்ப்பு கொட்டகை அமைக்கப்பட்டு பட்டு வளர்ப்பு மற்றும் பட்டு கூடுகள் விற்பனை குறித்து பயனாளியிடம் கேட்டறிந்தார். மேலும், கே.எட்டிப்பள்ளி ஊராட்சி, மங்கவரம் கிராமத்தில் ஜல் ஜீவன் சேமிப்பு நிதி கீழ், ரூ.7 இலட்சத்து 30 ஆயிரம் மதிப்பில் 10 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட புதியதாக கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் பைப் லைன் அமைக்கப்பட்டுள்ள பணிகளை பார்வையிட்டு, மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் சேமிக்கப்பட்டுள்ள நீரில் குளோரின் அளவு சரியாக உள்ளதா என்பதை ஆய்வு செய்தார். தொடர்ந்து, கே.எட்டிப்பட்டி ஊராட்சி, கூனம்பட்டி கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டம் கீழ், ரூ.2 இலட்சம் மதிப்பில் விவசாயி பழனி த/பெ.வீராகவுண்டர் விவசாய நிலத்தில் மண் வரப்பு அமைக்கும் பணிகளை பார்வையிட்டு, பணியாளர்களின் வருகை பதிவேடு மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஊதியம் குறித்து பணியாளர்களிடம் கேட்டறிந்தார். தொடர்ந்து, குன்னத்தூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் குழந்தைகள் நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் கீழ், ரூ.35 இலட்சத்து 6 ஆயிரம் மதிப்பில் 2 வகுப்பறைகளின் கட்டுமான பணிகளை பார்வையிட்டு, பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு விட வேண்டும் என அறிவுறுத்தினார். மேலும், குன்னத்தூர் ஊராட்சியில், பாரத பிரதமர் ஜன்மன் திட்டம் திட்டத்தின் கீழ், ரூ.4 இலட்சத்து 80 ஆயிரம் மதிப்பில் பயனாளிகள் நிரோஷா க/பெ.சுரேஷ், சசிகலா க/பெ.ராஜா ஆகியோர்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளின் கட்டுமான பணிகளையும், தொடர்ந்து, குன்னத்தூர் ஊராட்சியில் 15 வது நிதிக்குழு மானியத் திட்டத்தின் கீழ் 145 மீட்டர் நீளத்திற்கு ரூ.7 இலட்சம் மதிப்பில் கழிவுநீர் கால்வாய் கட்டுமான பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, மத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சித்துறை சார்பாக நடைபெற்று வரும் அடிப்படை கட்டமைப்பு வசதிகள், குடிநீர் திட்ட பணிகளுக்கு முன்னுரிமை வழங்கி பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் ஒன்றிய பொறியாளர்களுக்கு மாவட்ட கலெக்டர்கே.எம். சரயு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உமா சங்கர், சிவபிரகாசம், உதவி பொறியாளர்கள் சாஷ்தா, ஜமுனா மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பணி மேற்பார்வையாளர்கள் உடனிருந்தனர்.

# மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள திருநங்கைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஆலோசனை கூட்டம்



மயிலாடுதுறை, மே. 31

மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையம், பழைய பேருந்து நிலையம் மற்றும் வரதாச்சாரியார் புங்கா அமைந்துள்ள சாலை ஆகிய பகுதிகளில் வழிப்பறி மற்றும் போதை பொருட்கள் புழக்கத்தில் உள்ளதாக மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு புகார் வரப்பெற்றதையொட்டி 28.5.2024 அன்று நள்ளிரவு 12.30 மணி அளவில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டார்கள்.

அப்போது புதிய பேருந்து நிலையம் அமைந்துள்ள சாலைகளில் திருநங்கைகள் நின்றதை பார்த்த மாவட்ட கலெக்டரிடம் விசாரணை மேற்கொண்டு, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறிவுறுத்தி அவர்களை அவரவர் வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். தொடர்ந்து புதிய பேருந்து நிலையம் மற்றும் பழைய பேருந்து நிலையத்தில் மாவட்ட கலெக்டர் ஆய்வு மேற்கொண்டார்கள்.

அதன்தொடர்ச்சியாக மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள திருநங்கைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகள் குறித்து மாவட்ட கலெக்டர் ஏ.பி.மகாபாரதி தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டத்தில் உள்ள 42 திருநங்கைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கவும், அவர்களின் கோரிக்கையின்படி அவர்களுக்கு தேவைகளான குடியிருப்பு பட்டா, குடும்ப அட்டை, சுய தொழில் தொடங்க தேவையான கடனுதவிகள் போன்றவைகள் வழங்க உரிய நடவடிக்கை எடுக்க மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட சமூகநல அலுவலர் மற்றும் மாவட்ட வழங்கல் அலுவலர் ஆகியோரிடம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவுறுத்தனார்கள். திருநங்கைகள் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துக்கொள்ள தேவையான நலத்திட்டங்களை மாவட்ட சமூக நல அலுவலகம் வாயிலாக பெற்றுக்கொண்டு வாழ்க்கையில் உயர வேண்டும் என அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மு.மணிமேகலை, துணை காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) சொக்கநாதன், மாவட்ட ஆட்சியரின் நேர் முக உதவியாளர் (பொது) முத்துவடிவேல். மாவட்ட சமூக நல அலுவலர் சுகிர்தா தேவி, மாவட்ட வழங்கல் அலுவலர் பானுகோபன், மயிலாடுதுறை வட்டாட்சியர் விஜயராணி மற்றும் திருநங்கைகள் கலந்து கொண்டனர்.

# ஈரோடு நாடாளுமன்றத் தொகுதிக்கான வாக்கு எண்ணும் பணி நடைபெறவுள்ளதை முன்னிட்டு, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம்



ஈரோடு, மே. 31

ஈரோடு நாடாளுமன்ற தொகுதிக்கான வாக்கு எண்ணும் மையமான ஈரோடு அரசினர் பொறியியல் கல்லூரியில் அன்று வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளதை முன்னிட்டு, மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா தலைமையில், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா தெரிவித்ததாவது,

ஈரோடு நாடாளுமன்ற தொகுதிக்கான வாக்கு எண்ணிக்கை வருகின்ற 04.06.2024 அன்று நடைபெறவுள்ளது. நாடாளுமன்ற தேர்தல் வாக்குகள் எண்ணிக்கையானது, ஒரு சட்டமன்ற தொகுதிக்கு தலா 14 மேசைகள் வீதம் 6 சட்டமன்ற தொகுதிகளுக்கும் 84 மேசைகளில் எண்ணப்படவுள்ளது. எனவே உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் பாதுகாப்பு இருப்பறையில் இருந்து வாக்கு எண்ணும் அறைக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை பாதுகாப்புடன் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். 1 முதல் 14 வரை உள்ள அனைத்து மேசைகளிலும் வரிசை எண் குறிப்பிடப்பட்டுள்ளதை உறுதி செய்ய வேண்டும். வாக்கு எண்ணிக்கையானது ஒவ்வொரு சுற்று முடிவிலும் அறிவிப்பு பலகையில் முறையாக எழுதப்பட வேண்டும்.

மேலும், வாக்கு எண்ணும் அறைக்குள் தேவையான குடிநீர், இருக்கைகள் மற்றும் தற்காலிக கழிப்பறைகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும், வாக்கு எண்ணும் மையத்தில் வேட்பாளர்கள், வேட்பாளர் முகவர்களுக்கென தனி வழியினையும் வாக்கு எண்ணும் பணியில் ஈடுபடும் பணியாளர்கள், அரசு அலுவலர்களுக்கென தனி வழியினையும் ஏற்பாடு செய்ய வேண்டும். உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் வாக்கும் எண்ணும் பணியை இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றி மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

# நெல்லையில் வாக்கு எண்ணும் மேற்பார்வையாளர்கள், வாக்கு எண்ணும் உதவியாளர்கள் மற்றும் நுண் பார்வையாளர்களுக்கான பயிற்சி வகுப்பு



நெல்லை, மே. 31

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவுப்படி 38.திருநெல்வேலி மக்களவை தொகுதிக்கு கடந்த 19.04.2024 அன்று வாக்குப்பதிவு நிறைவுற்றதை தொடாந்து வாக்கு எண்ணிக்கையானது 04.06.2024 அன்று நடைபெறுவதை முன்னிட்டு சட்டமன்ற தொகுதி வாரியாக வாக்கு எண்ணும் பணிக்கு முதற்கட்டமாக கணிணி சுழற்சி முறையில் வாக்கு எண்ணும் மேற்பார்வையாளர்கள் 102 நபர்கள், வாக்கு எண்ணும் உதவியாளர்கள் 102 நபர்கள், மற்றும் 102 நுண் பார்வையாளர்கள் ஆக மொத்தம் 306 அலுவலர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு வாக்கு எண்ணும் பணிக்கான வழிமுறைகள் குறித்து பயிற்சி வகுப்பு மாவட்ட ஆட்சியர் அலுலக கூட்டரங்கில் மாவட்ட கலெக்டர் கா.ப.கார்த்திகேயன், தலைமையில் நடைபெற்றது.

வாக்கு எண்ணும் அலுவலர்கள் பாதுகாப்பான முறையில் வாக்கு எண்ணும் மையத்திற்கு வருகை புரிந்து அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணியினை பொறுப்புடன் பணியாற்ற வேண்டும். அனைத்து விதிமுறைகளையும் முறையாக கடைபிடிக்க வேண்டும். வாக்கு எண்ணும் மையத்தில் பணிபுரியக்கூடிய அலுவலர்கள் தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்கள் மற்றும் குறைபாடுகள் குறித்து சம்பந்தப்பட்ட உதவி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தெரிவித்து நிவர்த்தி செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

இப்பயிற்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. மா.சுகன்யா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திருமதி. ராஜசெல்வி, அனைத்து சட்டமன்ற தொகுதி உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# நீலகிரி மாவட்டத்தில், இயங்கி வரும் பள்ளி மாணவ, மாணவியர்கள் பயணிக்கும் வாகனங்கள்: கலெக்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

ஊட்டி, மே. 31

நீலகிரி மாவட்டம், உதகை அரசு கலைக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில், பள்ளி மாணவ, மாணவியர்கள் பயணிக்கும் வாகனங்களை, மாவட்ட கலெக்டர் மு.அருணா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள மாணவ, மாணவியர்களை பள்ளிக்கு அழைத்து செல்லும் பள்ளி வாகனங்களில் உள்ள பாதுகாப்பு வசதிகள் குறித்து, இன்றைய தினம் நேரில் ஆய்வு செய்யப்பட்டது. நீலகிரி மாவட்டத்தில் சுமார் 272 பள்ளி வாகனங்கள் மூலம் மாணவ, மாணவியர்கள் பள்ளிகளுக்கு அழைத்து செல்லப்படுகிறார்கள். மேலும் இன்றைய தினம் உதகை அரசு கலைக்கல்லூரி மைதானத்தில் வைத்து, உதகை வட்ட பகுதிகளில் உள்ள குழந்தைகளை பள்ளிக்கு அழைத்து செல்லும் சுமார் 110 வாகனங்களில் உள்ள பாதுகாப்பு வசதிகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. இப்பள்ளி வாகனங்களில் தீயணைப்புக்கருவி, முதலுதவி பெட்டி, அவசரகால வழி மற்றும் வாகனத்தின் நிலை ஆகியவை பயன்பாட்டில் நல்ல நிலையில் உள்ளனவா என்றும், வாகனத்தின் தகுதி சான்று, புத்தகங்கள் போன்றவற்றை சரியான முறையில் பாராமரிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.


நீலகிரி மாவட்டம் மலை மாவட்டமாக உள்ள காரணத்தினால் வாகனத்தினை எவ்வாறு இயக்க வேண்டும் என வாகன ஓட்டுநர்களுக்கு ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், தீயணைப்பு துறையினரால் தீ தடுப்பு நடவடிக்கைகள் எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் என்பதனை குறித்தும், பாதுகாப்பு முறைகள் குறித்தும், ஓட்டுநர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும் சில பள்ளி வாகனங்களில் போக்குவரத்துத்துறை அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டுள்ள குறைபாடுகளை, சீர்செய்த பின் மீண்டும் அந்த வாகனங்கள் ஆய்வுகளுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தீயணைப்புத்துறையின் மூலம் அளிக்கப்பட்ட தீ தடுப்பு தொடர்பான செயல்முறை காட்சிப்படுத்தியதை பார்வையிட்டார்.

இந்த ஆய்வின் போது வட்டார போக்குவரத்து அலுவலர் தியாகராஜன், தீயணைப்புத்துறை உதவி மாவட்ட அலுவலர் ஹரி ராமகிருஷ்னன், மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை 1) முத்துசாமி, தீயணைப்புத்துறை பணியாளர்கள், வாகன ஓட்டுநர்கள் உட்பட பலர் உள்ளனர்.

## 'மெட்ரோ' சிரிஷ், பாபி சிம்ஹா நடித்துள்ள 'நான் வயலன்ஸ்' படத்தின் பர்ஸ்ட்லுக் போஸ்டர் வெளியானது




'மெட்ரோ' மற்றும் 'கோடியில் ஒருவன்' படங்களை இயக்கியவர் ஆனந்த கிருஷ்ணன். இவர் தற்போது இயக்கும் புதிய படத்தில் பாபி சிம்ஹா, மெட்ரோசிரிஷ் மற்றும் யோகி பாபு ஆகியோர் நடிக்கின்றனர். யுவன்சங்கர்ராஜா இசையமைக்கும் இந்த படத்துக்கு 'நான்வயலன்ஸ்' (NonViolence) என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்த படத்தின் இறுதிக்கட்ட படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது. 'நான் வயலன்ஸ்' திரைப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி உள்ளிட்ட மொழிகளில் இந்த ஆண்டில் வெளியாக உள்ளது. இந்த நிலையில் இந்த படத்தின் பர்ஸ்ட்லுக் போஸ்டர் தற்போது வெளியாகி உள்ளது.

இந்த பர்ஸ்ட்லுக் போஸ்டரை இயக்குனர் வெங்கட் பிரபு மற்றும் இசையமைப்பாளர் எஸ்.எஸ் தமன் தங்கள் சமூக வலைதளத்தில் வெளியிட்டனர். இந்த போஸ்டர் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

## துல்கர் சல்மான் நடித்துள்ள 'லக்கி பாஸ்கர்' படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு



இயக்குனர் வெங்கி அட்லூரி இயக்கத்தில் நடிகர் துல்கர் சல்மான் நடித்துள்ள திரைப்படம் 'லக்கி பாஸ்கர்'. இந்த படத்தில் அவருக்கு ஜோடியாக நடிகை மீனாட்சி சவுத்ரி நடித்துள்ளார். சித்தாரா எண்டர்டெயின்மென்ட் மற்றும் பார்ச்சூன் 24 ஆகிய நிறுவனங்கள் இணைந்து தயாரித்துள்ள இந்த படத்துக்கு ஜி.வி.பிரகாஷ் குமார் இசையமைத்துள்ளார். நிமிஷ் ரவி ஒளிப்பதிவு செய்துள்ளார். நவின் நூலி படத்தொகுப்பு செய்கிறார். சமீபத்தில் இந்த படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் மற்றும் டீசர் வெளியாகி கவனம் பெற்றது. இந்த நிலையில் இந்த படத்தின் ரிலீஸ் தேதி குறித்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. அதன்படி, 'லக்கி பாஸ்கர்' திரைப்படம் வருகிற செப்டம்பர் மாதம் 27ந்தேதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 'சீதா ராமம்' படத்தின் வெற்றியை தொடர்ந்து துல்கர் சல்மான் நடிக்கும் இரண்டாவது தெலுங்கு படம் 'லக்கி பாஸ்கர்' என்பது குறிப்பிடத்தக்கது.


## 'சூர்யா 44 ' படத்தின் புதிய அப்டேட்



நடிகர் சூர்யாவின் 44வது படத்தை இயக்குநர் கார்த்திக் சுப்பராஜ் இயக்குகிறார் . இப்படத்தை சூர்யாவின் 2டி மற்றும் கார்த்திக் சுப்புராஜின் ஸ்டோன் பென்ச் நிறுவனம் இணைந்து தயாரிக்கின்றன. இப்படத்திற்கு இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் இசையமைக்கிறார். இந்த படம் பீரியாடிக் கேங்க்ஸ்டர் மற்றும் காதல் பின்னணியை கதைக்களமாக கொண்டு உருவாகவுள்ளது. சூர்யா இத்திரைப்படத்தில் இரட்டை வேடங்களில் நடிக்கவுள்ளார் என்ற தகவல் வெளியாகியுள்ளது. சூர்யா 44 படப்பிடிப்பு வருகிற ஜூன் மாதம் அந்தமானில் துவங்க உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில், சூர்யா 44 படத்தின் புதிய அறிவிப்பை படக்குழு அறிவித்துள்ளது. அதன்படி , ஷ்ரேயாஸ் கிருஷ்ணா ஒளிப்பதிவு பணிகளை மேற்கொள்ள ஷபீக் முகமது அலி படத்தொகுப்பு செய்கிறார். சண்டை பயிற்சி பணிகளை கெச்சா கம்பக்தீ மேற்கொள்கிறார், கலை இயக்க பணிகளை ஜாக்கியும், ஆடை வடிவமைப்பு பணிகளை பிரவீன் ராஜா மேற்கொள்கின்றனர்.

## 'மஞ்சுமல் பாய்ஸ் படக்குழு கமலை பார்த்த மாதிரி இளையராஜாவையும் பார்த்திருந்தால்...' விஜய் ஆண்டனி




ரோமியோ திரைப்பட வெற்றிக்கு பிறகு விஜய் ஆண்டனி மற்றும் சரத்குமார் இணைந்து நடித்துள்ள புதிய படம் "மழை பிடிக்காத மனிதன்". விஜய் மில்டன் இயக்கத்தில் உருவாகி இருக்கும் இந்த படத்தில் சத்யராஜ், டாலி தனஞ்சயா, முரளி ஷர்மா, மேகா ஆகாஷ், தலைவாசல் விஜய், சரண்யா பொன்வண்ணன் மற்றும் பிருத்வி அம்பெர் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

கமல் போஹ்ரா, லலிதா, பிரதீப் மற்றும் பன்கஜ் போஹ்லரா இணைந்து தயாரித்துள்ள இந்த படத்தின் டீசர் இன்று வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி இந்த படத்தின் டீசர் வெளியீட்டு விழா சென்னை, சாலிகிராமத்தில் உள்ள பிரசாத் லேப்பில் இன்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் நடிகர் விஜய் ஆண்டனி, சத்யராஜ் மற்றும் நடிகை மேகா ஆகாஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். அப்போது விஜய் ஆண்டனி செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தார். மஞ்சுமல் பாய்ஸ் படக்குழுவிற்கு இளையராஜா நோட்டீஸ் அனுப்பியது தொடர்பான கேள்விக்கு,

"படம் வெற்றி பெற்றவுடன் கமல் சாரை பார்த்ததுபோல் இளையராஜா சாரையும் பார்த்திருந்தால் இந்தளவிற்கு போயிருக்காது என நினைக்கிறேன். உண்மையாக என்ன நடந்தது என எனக்கு தெரியவில்லை. ராஜா சார், முன்னதாக சொந்தமாக ஆடியோ லேபிள் வைத்திருந்தார். எகோ கம்பெனியின் உரிமையாளரும் அவர் தான் என நினைக்கிறேன். அவர் நண்பரின் பெயரில் நடத்திட்டு வந்தார். உரிமம் உள்ள பாடல்களுக்கு மட்டும் தான் அவர் ராயல்டி கேட்கிறார் என நினைக்கிறேன்" என்றார்.

## காஞ்சி காமாட்சி அம்மன் கோவிலில் சாமி தரிசனம் செய்த விஜய்யின் பெற்றோர்



கோவில் நகரம் என அழைக்கப்படும் காஞ்சிபுரத்தில் சக்தி பீடங்களில் ஒன்றான ஸ்ரீ காஞ்சி காமாட்சி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது. நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தமிழகம் மட்டுமல்லாமல் பிற மாநிலங்களிலிருந்தும் காமாட்சி அம்மனை தரிசனம் மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில், நடிகர் விஜய்யின் தந்தை எஸ்.ஏ. சந்திரசேகரும், தாயார் ஷோபாவும் இன்று காலை காஞ்சி காமாட்சி அம்மன் திருக்கோவிலில் சிறப்பு தரிசனம் செய்தனர். மூலவர் சன்னதியில் 10 நிமிடங்கள் சிறப்பு அர்ச்சனைகள் மற்றும் பிரார்த்தனைகளை மேற்கொண்ட பின் அவருக்கு திருக்கோயில் சார்பாக பிரசாதங்கள் வழங்கப்பட்டது. அப்போது செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்தார். விஜய் அரசியலுக்கு வந்தது குறித்த கேள்விக்கு, என்னுடைய வாழ்த்துகள், ஆசீர்வாதம் எப்போதும் என் புள்ளைக்கு உண்டு. என்றார். மேலும், முன்பு போல நீங்கள் ஏன் அவர் அரசியல் செயல்பாட்டில் ஈடுபாடு காட்டுவதில்லை? என்ற கேள்விக்கு, "அப்படி எல்லாம் இல்லை. நான் எப்போதும் போல விஜய்யின் அரசியல் செயல்பாடுகளில் ஈடுபாடு காட்டி வருகிறேன். என்றார்.

## நடிகர் அஜித்துடன் சந்திப்பு.. நினைவுகளைப் பகிர்ந்த சிரஞ்சீவி



நடிகர் அஜித் தற்போது 'குட் பேட் அக்லி' திரைப்படத்தில் நடித்து வருகிறார். இயக்குநர் ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கும், இந்த படம் அடுத்த ஆண்டு பொங்கல் பண்டிகை தினத்தில் வெளியாகும் என்று படக்குழு அறிவித்து இருக்கிறது. இந்த படத்தின் படப்பிடிப்பு ஐதராபாத்தில் நடைபெற்று வருவதாக கூறப்படுகிறது. அதன்படி ஐதராபாத் நகரில் படப்பிடிப்புக்கு இடையே, நடிகர் அஜித் குமார் தெலுங்கு திரையுலகின் முன்னணி நடிகர் சிரஞ்சீவியை சந்தித்துள்ளார். ஐதராபாத் நகரில் சிரஞ்சீவி நடிப்பில் உருவாகும் விஷ்வம்பரா படத்தின் படப்பிடிப்பு நடைபெற்று வந்தது. விஷம்பரா படப்பிடிப்பு தளத்திற்கு சென்ற நடிகர் அஜித் குமார் சிரஞ்சீவி மற்றும் படக்குழுவை சந்தித்துள்ளார். இது தொடர்பாக நடிகர் சிரஞ்சீவி தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் ,

'விஸ்வம்பரா' செட்டிற்கு சர்ப்ரைஸாக அஜித்குமார் வந்திருந்தார். இருவரும் சிறிது நேரம் அரட்டை அடித்தோம். அவரது முதல் தெலுங்கு படமான பிரேம புஸ்தகம் காலத்தை நினைவு கூர்ந்தோம். பல ஆண்டுகளாக அஜித் அடைந்திருக்கும் இந்த அபரிதமான வளர்ச்சியை பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். என தெரிவித்துள்ளார்.

## கேப்டனாக வெவ்வேறு விதமான வீரர்களை கையாள்வது சவாலாக இருக்கும் ரோகித் சர்மா




இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டன் ரோகித் சர்மா தலைமைப் பண்பு குறித்து ஒரு நிகழ்ச்சியில் பேசியதாவது:

எந்த ஒரு கேப்டனுக்கும் அணியில் வெவ்வேறு விதமான வீரர்களை கையாள்வது மிகப்பெரிய சவாலாக இருக்கும். ஏனெனில் ஒவ்வொரு வீரரும் தனித்தனி சிந்தனை, செயல்முறைகளை கொண்டுள்ளனர். ஒரு கேப்டனாக அதை எல்லாம் உள்வாங்கிக் கொண்டு அதற்கேற்ப செயல்பட வேண்டும்.

கேப்டனாக நான் கற்று கொண்ட மிகப்பெரிய விஷயம், ஒவ்வொரு வீரருக்கும் சரிசமமான முக்கியத்துவம் கொடுத்து, அவர்களை அணியின் ஒரு அங்கமாக, முக்கியமான வீரராக உணர வைக்க வேண்டும் என்பது தான். வீரர்கள் ஏதேனும் பிரச்சினையுடன் அணுகினால் அதை கவனமுடன் கேட்டு பிரச்சினைக்கு சிறந்த தீர்வைக் கொடுத்து உதவ வேண்டும். கேப்டனாக மட்டுமின்றி ஒரு வீரராகவும் நான் எந்த சூழலுக்கும் தயாராக இருக்கிறேன். இவ்வாறு ரோகித் சர்மா கூறினார்.

## கிரிக்கெட்டில் என்னுடைய ஆசை இதுதான் ரிங்கு சிங்




டி20 உலகக்கோப்பை தொடருக்கான 15 வீரர்கள் கொண்ட இந்திய அணி கடந்த மாதம் அறிவிக்கப்பட்டது. கேப்டனாக ரோகித் சர்மா நீடிக்கும் நிலையில், துணை கேப்டன் பொறுப்பு ஆல்ரவுண்டர் ஹர்திக் பாண்ட்யாவிற்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த அணியில் விராட் கோலி, சூர்யகுமார் யாதவ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

ஆனால் இந்த அணியில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இளம் வீரர் ரிங்கு சிங் கழற்றி விடப்பட்டுள்ளது ரசிகர்களுக்கு மிகப்பெரிய ஏமாற்றமாக அமைந்துள்ளது. ஏனெனில் கடந்த வருடம் நடைபெற்ற ஐ.பி.எல். தொடரில் குஜராத்துக்கு எதிராக 5 சிக்சர்கள் அடித்து உலகையே திரும்பிப் பார்க்க வைத்த அவர் இந்தியாவுக்காக அறிமுகமானார். அந்த வாய்ப்பில் பெரும்பாலான போட்டிகளில் சிறந்த பினிஷராக செயல்பட்டு இந்தியாவின் வெற்றிகளில் பங்காற்றினார்.

இருப்பினும் தற்போதைய ஐ.பி.எல். தொடரில் பெரிய ரன்கள் எடுக்கத் தவறினார் என்ற ஒரே காரணத்திற்காக ரிங்குவை கழற்றி விட்டுள்ள தேர்வு குழு ரிசர்வ் பட்டியலில் மட்டுமே இணைத்துள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் டி20 உலகக்கோப்பை தொடரின் முதன்மை இந்திய அணியில் இடம் கிடைக்காமல் ரிசர்வ் வீரராக மட்டுமே ரிங்கு சிங் தேர்வு செய்யப்பட்டது அவருக்கு வருத்தம் அளித்திருந்தாலும் அடுத்து தன்னுடைய இலக்கு என்ன? என்பது குறித்து அவர் பேசியிருக்கிறார்.

இது குறித்து அவர் கூறுகையில், "கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் நான் பேட்டிங் வரிசையில் கீழேதான் இறங்கி பேட்டிங் செய்து வருகிறேன். அணிக்கு எது நல்லது நல்லதோ அதை செய்ய வேண்டும் என்று மட்டும்தான் முடிவு செய்து பேட்டிங் செய்து வருகிறேன். இந்த ஆண்டு ஐ.பி.எல். தொடரில் எனக்கு பேட்டிங் செய்ய அதிகளவு வாய்ப்பு கிடைத்தது. ஆனாலும் என்னால் சிறப்பாக செயல்பட முடியவில்லை என்பதுதான் உண்மை.

அதேவேளையில் நான் சரியாக பேட்டிங் செய்தேனா? இல்லையா? என்பது முக்கியமல்ல அணியின் நலனுக்காக நான் பின்வரிசையில் களமிறங்கி வெற்றிக்காக போராட வேண்டும் என்பது மட்டுமே என்னுடைய எண்ணம். என்னை பொறுத்தவரை எங்கு களமிறங்கினாலும் என்னால் சிறப்பாக விளையாட முடியும். நான் எப்போது பேட்டிங் செய்ய களமிறங்கினாலும் போட்டியின் சூழ்நிலைக்கு ஏற்ப விளையாட வேண்டும். அணிக்கு அணியின் வெற்றிக்கு என்ன தேவையோ அதனை கருத்தில் கொண்டு பேட்டிங் செய்வேன்" என்று கூறினார்.

மேலும் தொடர்ந்து பேசிய அவர், "அனைத்து வடிவமான கிரிக்கெட்டிலும் விளையாடுவதே என்னுடைய ஆசை. சமீபத்தில் தென் ஆப்பிரிக்கா தொடரின்போது ஒருநாள் போட்டிகளில் விளையாட வாய்ப்பு கிடைத்தது. அடுத்ததாக நான் விரைவில் டெஸ்ட் போட்டியிலும் விளையாட வேண்டும் என்பதற்காக கடுமையான உழைப்பை வெளிப்படுத்தி வருகிறேன். கிரிக்கெட்டில் மிகப்பெரிய விஷயம் என்றால் டெஸ்ட் கிரிக்கெட்தான். டி20 போட்டிகளில் யார் வேண்டுமானாலும் விளையாடலாம் ஆனால் டெஸ்ட் போட்டியில் விளையாட அனைவருக்குமே வாய்ப்பு அவ்வளவு எளிதில் கிடைக்காது. டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாட வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை" என்று கூறினார்.

## பிரெஞ்சு ஓபன் டென்னிஸ்; முதல் சுற்று ஆட்டத்தில் வெற்றி கண்ட ஹோல்கர் ரூனே



பல முன்னணி வீரர்கள் கலந்து கொண்டுள்ள பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் தொடர் பிரான்ஸ் தலைநகர் பாரீசில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரரான டென்மார்க்கின் ஹோல்கர் ரூனே, இங்கிலாந்தின் டான் எவன்ஸ் உடன் மோதினார். இந்த ஆட்டத்தில் ஆரம்பம் முதலே அபாரமாக செயல்பட்ட ஹோல்கர் ரூனே 64, 64, 64 என்ற நேர் செட் கணக்கில் இங்கிலாந்தின் டான் எவன்ஸை வீழ்த்தி 2வது சுற்றுக்கு முன்னேறினார்.

## உலக செஸ் சாம்பியன்ஷிப்பை நடத்துவதற்கு வாய்ப்பு கேட்டு இந்தியா 'பிடே'விடம் விண்ணப்பித்துள்ளது




கனடாவில் கடந்த மாதம் நடந்த கேன்டிடேட்ஸ் செஸ் போட்டியில் இந்திய வீரர் தமிழகத்தை சேர்ந்த டி.குகேஷ் கோப்பையை கைப்பற்றியதுடன், உலக செஸ் சாம்பியன்ஷிப்புக்கும் தகுதி பெற்றார். சாம்பியன்ஷிப்பில் விளையாடப்போகும் இளம் வீரர் என்ற பெருமையை 17 வயதான குகேஷ் பெற்றுள்ளார்.

உலக செஸ் சாம்பியன்ஷிப்பில் அவர் நடப்பு சாம்பியனான சீனாவின் டிங் லிரெனுடன் மோதுகிறார். இந்த போட்டி நவம்பர் டிசம்பரில் நடைபெறுகிறது. ஆனால் போட்டிக்கான இடம் இன்னும் அறிவிக்கப்படவில்லை. இந்த நிலையில் இந்த போட்டியை இந்தியாவில் நடத்துவதற்கு உரிமை கோரி அதற்கான விண்ணப்பத்தை இந்திய செஸ் சம்மேளனம், சர்வதேச செஸ் கூட்டமைப்பிடம் (பிடே) சமர்ப்பித்துள்ளது.

உரிமம் கோருவதற்கு நாளை வரை அவகாசம் உள்ளது. இப்போதைக்கு இந்தியா தவிர வேறு எந்த நாடும் விண்ணப்பிக்கவில்லை. ஆனால் சிங்கப்பூரும் கோதாவில் குதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

'பிடே' கவுன்சில் கூட்டம் அடுத்த வாரம் நடைபெறுகிறது. இதில் உலக செஸ் சாம்பியன்ஷிப்பை நடத்தும் வாய்ப்பை எந்த நாட்டுக்கு வழங்குவது என்று முடிவு செய்யப்படும் என்று 'பிடே' தலைமை செயல் அதிகாரி எமில் சுடோவ்ஸ்கி நேற்று தெரிவித்தார். மொத்தம் 25 நாட்கள் நடக்க உள்ள இந்த போட்டிக்கான மொத்த பட்ஜெட் ரூ.71 கோடியாகும். இது தவிர 'பிடே' அமைப்புக்கு ரூ.9 கோடி போட்டி கட்டணமாக வழங்க வேண்டும். இந்த தொகைக்கு உத்தரவாதம் கொடுத்தால் மட்டும் உரிமம் கோர முடியும். எனவே இந்திய செஸ் சம்மேளனம் போட்டியை நடத்தும் வாய்ப்பை பெற்றால் ரூ.71 கோடி செலவழிக்க வேண்டி இருக்கும்.

அத்துடன் 'பிடே' வழங்கும் இந்த போட்டிக்கான மொத்த பரிசுத்தொகை ரூ.17 கோடியில் இருந்து ரூ.20 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. சாம்பியன்ஷிப் வாய்ப்பை இந்தியாவுக்கு 'பிடே' ஒதுக்கினால் சென்னையில் போட்டி நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில் குகேஷ் சென்னையைச் சேர்ந்தவர் என்பதால் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்படும். உலக செஸ் சாம்பியன்ஷிப் இந்தியாவில் ஏற்கனவே இரண்டு முறை அரங்கேறியுள்ளது. 2000ம் ஆண்டில் டெல்லியிலும், 2013ம் ஆண்டில் சென்னையிலும் நடந்துள்ளது நினைவு கூரத்தக்கது.



**அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்**

**ஏதம் படுபாக் கறிந்து**

**விளக்கம்:**

**பொறாமைப்படுதலாகிய தவறான நெறியில் துன்பம் ஏற்படுதலை அறிந்து, பொறாமை காரணமாக அறமல்லா தவைகளைச் செய்யார் அறிவுடையோர்.**

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.